உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௦.] விஜய-௵—மார்கழி-௴ [பகுதி-௨.

Vol. 50. December 1953—January 1954. No. 2.

சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்

திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, முதுகாட்டில் தெய்வம் சீவகனை வாழ்த்துகையில் அவன் நற்றாய் விசயையும் உடனாய் நின்று, சீவ என வாழ்த்தினள். கந்துகன் காணாமைவேண்டும் என்ற அச்சத்தால் அவள் மனத்துள்ளே மறைவாக நிகழ்ந்தது இது. இவ் அச்சந்தோன்ற ஆசிரியரும் இச் செய்தியைச் செய்யுளில் மறையவே வைத்தார்.

சினைமறைந்து ஒருகுரல் சீவ என்றதே (323)

என்பது அவர் மணிவாக்கு. இங்கு ஒருகுரல் என்றதனால் மற்றொரு குரலும் உய்த்துணரத் தக்கது. ஒரு குரல் தெய்வத்தின் வாழ்த்து; மற்றொரு குரல் தேவியின் வாழ்த்து. முன்னது வெளிப்படையாய் வாழ்த்தியது; பின்னது மறைவாய் வாழ்த்தியது. இத்திறமெல்லாம் இனிது விளங்க இங்கு உரையாசிரியரும் உய்த்துக் கொண்டு உணர்த்தினர். 'தேவி அச்சத்தால் தன்னுள்ளே வாழ்த்துதலின், ஒரு குரல் என்றார்' என்பது அவருரை.

பின்னையும் தேவி தண்டாரணியத்துத் தவப்பள்ளியைச் சார்ந்து, தன் பிள்ளைக்குப் பெருவாழ்வுண்டாக நோற்றனள் என்று சொல்

லப் படுகிறது. இங்ஙனம் அவள் செட்டிடை கழிந்து தவக்கோலம் பூண்டு உருமாறியது, அரசன் உழையர் அயிராமைப் பொருட்டு. அவர்க்கு ஆராய்ச்சி பிறந்தால் சீவகன் வாழ்விற்குக் கேடு சூழு மன்றோ? இவ்வாறு அவற்குக் கேடுவாராமைக்கும் ஆக்கமுண்டா தற்கும் அவள் தவவேடம் தாங்கி நோன்பாற்றினள் என்பதாம். ஆகவே சீவகன் சிவித்தல் உடையனாகச் செய்ய, இக் கதைநிகழ்ச்சி களும் இங்ஙனம் உதவின.

இனி, கந்துகன் மனையில் பிள்ளைக்குப் பெயர்சூட்டு விழா நிகழ்ந்தது பெரியதோர் அதிசய முடையது. சீவ எனத் தெய்வம் வாழ்த்தினமையின் சீவகன் எனப் பெயராயிற்று என்பது மிகவும் உண்மையே. எனினும் காட்டில் நேர்ந்த அந் நிமித்தத்தைக் கந்து கன் ஒருவனே உணர்ந்திருந்தான். அன்றி அவன் இல்லாள் சுநந்தைக்குக்கூட அவ்வுண்மையைச் சொல்லாது மறைத்து வைத் தான். அதனால் அது வேறொருவருக்கும் வெளிப்படல் அரியது. வெளிப்படினும் மிக்க விபரீதம் விளைக்கும். அங்ஙனமாகவும் ஊரவ ரெல்லாம் ஒப்பஇசைந்து சீவகனுக்கு அப்பெயர் வழங்குதல் எவ் வாறு ஏற்கும்? என்னும் இவ் வினாவிற்கு விடை வேண்டும்.

ஆயினும் சீவகன் நாமகரணச் சிறப்பைச் சிந்தாமணிப் புலவர் மிக வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

> கூற்றம் அஞ்சும் கொன்னுனை எஃகின் இளையானும்
> மாற்றம் அஞ்சும் மன்னிய கற்பின் மடவாளும்
> போற்றித் தந்த புண்ணியர் கூடிப் புகழோனைச்
> சீற்றத் துப்பிற் சீவக னென்றே பெயரிட்டார் (361)

என்பதே அச் செய்யுள். கந்துகனும் சுநந்தையும் போற்றிக் கொண்டுவந்த புண்ணியர், சீற்றத் துப்பிற் புகழோனைச் சீவக னென்றே பெயரிட்டார் என்பது இதன் கருத்து.

இங்கு, சீவகனென்றே என்ற ஏகாரப் பொருள் சிந்திக்க உரி யது. காவியங் கற்பார்க்கு அப் பெயர் முன்னரே அறியலானது போல வைத்து, ஆசிரியர் பேசிப் போந்தனர். அக் குறிப்பறிந்த

உரையாசிரியரும் 'சீவகன்-சீவித்தலை உடையவன் என்று தெய்வம் வாழ்த்தினமையின் அப் பெயரே ஆயிற்று' என விசேடக் குறிப்பு எழுதினர். ஏகார இடைச்சொற் பொருளை இவ்வாறல்லது வேறு வகையில் தேற்றுதல் அரிது.

ஆயின் தெய்வம் சாற்றிய செய்தி வேறொருவருக்கும் வெளிப்படாத இரகசியம் என முன்னர்க் கூறியது பொய்க்குமோ? எனின், உண்மையே. இஃது ஒரு காவியச் சிக்கலாய் மிகவும் மயக்கந் தருவது. ஆகலின் இதன் உட்கருத்து ஊன்றி உணர்தல்வேண்டும்.

நச்சினார்க்கினியர் குறிப்புரை நயம்மிக்கது. அரிதுணர் பொருளை அடக்கி நிற்கின்றது. முன்பு தெய்வம் வாழ்த்தின இடத்து 'சீவ என்றதே' என்பதற்கு 'சீவ-வேண்டுகோளாகிய வியங்கோட்கண்வந்த வடசொல்' என்று உரைஎழுதிப்போந்த அவர், இங்குப் பெயர்சூட்டின இடத்து 'சீவகனென்றே' என்பதற்கு 'சீவகன் - சீவித்தலைஉடையவன்' என்று சொற்பொருள் விரித்தது மிகவும் ஆழ்ந்த கருத்துக்கொண்டது.

சீவிக்க எனத் தெய்வம் வாழ்த்தினவன் சீவகன்; சீவித்தலை உடையவன் எனப் புண்ணியர் புகழ்ந்தவன் சீவகன். இவை இரண்டும் சொல்லால் ஒன்று; பொருளால் வேறு. இவ்வேற்றுமை விளங்க நச்சினார்க்கினியர் முன்னும் பின்னும் அப் பெயர்க்காரணம் வேறு வேறாக விளங்க விரித்தனர். இவ் இருபொருளும் அவ் ஒருசொல்லில் இரட்டுறமொழிதலாய் இயையும் என்னலாம். ஆயினும் இங்ஙனம் தெய்வம் வாழ்த்தப் பெற்ற பெயருடன் புண்ணியர் சூட்டப் பெற்றபெயர் பெரிதும் ஒற்றுமைநயம் வாய்ந்ததென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இவ் அரிய வாய்ப்பின் அதிசயத்தை வியந்தே, ஆசிரியர் திருத்தக்கதேவர் 'சீவகனென்றே பெயரிட்டார்' என் நாமகரணச் சிறப்பினை நன்கனம் பாராட்டினர். அந் நயம் உணர்ந்த நச்சினார்க்கினியரும் 'அப் பெயரே ஆயிற்று' என ஏகாரப் பொருளைத் தெளிவிப்பாராயினர். அவர் குறிப்புரைவாக்கியத்தின் முற்கூறு சீவகப்பெயரின் வேற்றுமைநயம் வேண்டி நின்றது; அதன் பிற்கூறு இவ் ஒற்றுமைநயம் உட்கொண்டெழுந்தது.

இதனால் காட்டில் தெய்வம் வாழ்த்திய செய்தி காவியக் கற்பார்க்கு மட்டுமே நினைவுறுத்தப்பட்டதாயிற்று. அன்றி, இராசமாபுரவாசிகள் எல்லார்க்கும் அவ் இரகசியம் வெளிப்பட்டதெனல் அமையாது. இங்ஙனம் தோன்றும் காவியச் சிக்கலை விடுப்பான் வேண்டியே நச்சினார்க்கினியர் குறிப்புரை நயம்பட வரைந்தனர்.

இவ்வாறு கொள்ளாவிடின் இடையூறுகள் பல்கும். தெய்வம் வாழ்த்தின பொருளிலேயே புண்ணியர் பெயர் சூட்டினர் என்று கொள்வது செவ்விதன்று. 'சீவகன் - சீவிக்கக்கடவன் என்று தெய்வம் வாழ்த்தினமையின் அப் பெயரே யாயிற்று' என வியங்கோள் விளங்க நச்சினார்க்கினியர் எளிதாக உரைஎழுதத் தெரியாதவரல்லரோ? அதனை விடுத்து 'சீவித்தலை உடையவன்' என அவர் வேறுவகையாக விவரித்தது விளக்கமான காரணம் வேண்டிநின்றது. அக்காரணப், மேலேகுறித்த மயக்கந்தீர அவர் வழிவகுப்பான் கருதியதேயன்றி வேறன்று. இங்ஙனம் அல்லவாயின், அச்சிக்கல் தீராமை மட்டுமன்றி, நச்சினார்க்கினியர் நல்லுரையும் முன்னொடு பின் முரணியதாய் வழுவும். சீவகன் என்ற பெயரில் எய்துவான் கிடந்த மிகப்பலவாய பொருள்நலமெல்லாம் புலனாகாமை மறையவும் நேரும்.

தெய்வத்தின் செய்தி தெரிந்திலதே எனின், சீவகப் பெயரில் புண்ணியர் கருதிய பொருள்தான் என்னையோ? எனில், இதற்கு விடை எளிது. சீவித்தலை உடையவன், அஃதாவது வாழப் பிறந்தவன், பகை கடிந்து நல்வாழ்வு பெற வல்லவன், என்னுமளவாகப் பொதுமையில் தோன்றும் பொருளே அப்போது அவர் கருதியதாகும் விளையும் பயிர் முளையிலே தெரிவதுபோல, குழந்தையின் குணம் குறி செயல்களால் ஆன்றோர் அகக்கண் முன்னர் இவ்வுண்மை தோன்றுதல் இயல்பே. சீவகனுக்குச் சென்மப் பகை கட்டியங்கார னென்றேனும், அவனையுங் கொன்று உயிர்வாழ வல்லன் அவ் அரசிளங்குமரன் என்றேனும், சிறப்புவகையான பொருள் அப்போது அவர்கட்கும் அறியலானதில்லை. இது போன்ற பொருளனைத்தும், முன்பின் தொடர்புடன் கதைகேட்பார்க்கு மட்டுமே கையிலங்கு கனியாய் விளங்க வல்லன.

இனி, கந்துகன் தன் இறந்தபிள்ளை உயிர்பெற்ற போது புறங்காட்டில் தெய்வம் சீவ என வாழ்த்திய தென்று, உண்மையைத் திரித்து ஊரவர்க்கு உணர்த்தலும் கூடுமன்றோ? அதனால் அக்காரணப்பெயரையே புண்ணியர் புதல்வனுக்கு இட்டு வழங்கினர் எனக் கொண்டால் என்னை? எனின்; அது கதைப்போக்கில் ஒருவாறு பொருந்துமாயினும் காவியச் சுவையில் சிறிதும் இன்பம் பயவாது; வெறுப்பு விளைப்பதும் ஆகும்.

ஏனெனில் அப்பொய்யுரை சீவகன் பிறப்பின் மறைவெளிப்படாமலிருக்கச் சிறிதும் உதவாமைமட்டு மன்று; அஃதோர் ஒவ்வாத பொய் என ஒன்னாத மன்னன் எண்ணலும் கூடும். அஃது அவன் ஒற்றர்க்குத் துப்பாகி, அவர் ஓர்வினைத் தூண்டிவிடும். அதனால் அவர் சுவடுகண்டறிந்து, சச்சந்தன்மைந்தனைச் சந்தேகங் கொள்ள நேர்ந்தால், அதன் விளைவு யாதாகும்? ஆதலின் சீவகன் வாழ்வே கண்ணுங் கருத்துமான கந்துகன், அப் பொய்யினை வெளியார்க்குக்கூறக் கனவிலும்கருதாமை வெளிப்படை. பேதைமை கலந்த பெண்ணியல்பால் கற்பினள் சுநந்தை ஒப்புவள் என்று, அவளிடம் மட்டும் அப் பொய் புனைந்துரைக்க, காரியப்பொருட்டாகக் கந்துகன் இசைந்தனன்.

அன்றியும் மாண்ட குழவி மயானம் சென்று மீண்டு வந்த தெனல், அமங்கலமாய இழிதக்க செய்தி. நள்ளிரவில் நேர்ந்த தன் பிள்ளையின் சாவை அவன் ஏதமின்றாக மறைத்தலும் எளிது. ஆகையால் அவ் விரும்பத்தகாத கூற்றை அவன் வேறொருவருக்கும் விளம்பாமையே வேண்டுவன்.

அவன் சொற்படிகடவாக் கற்புடைமனைவி சுநந்தையும் அதனைப் பிறரறியப் பேசுவாளல்லள். ஆயினும் புண்ணியர் சூட்டிய சீவகப் பெயரில், அவர் கருத்தானன்றி அவள் கருத்தால், செத்த பிள்ளை சீவன் பெற்றது என இக் காரணமும், இனிதாக இசைந்து திகழ்கிறது. அதனால் அப் பெயரமைப்பில் ஆச்சரியத்தை எண்ணி, அவள் மனத்துள்ளே மகிழவும் உரியள். கற்பனை கடந்த இவ் அற்புத வாய்ப்பு, காவியஞர்க்கும் வாசகர்களுக்கும் களிபேருவகை விளைக்க வல்லதாம்.

இனி, இறந்து பிறந்த மக்களையுள்ள மனையிடத்துச் சீவனுடன் தோன்றிய காரணத்தால் அவற்கு அப் பொராயிற் றெனல் அமையாதோ? எனின், ஆம். அக் காரணத்தை ஊரவர் உவப்பர்; கட்டியங்காரனும் களிப்புடன் ஏற்பன். அதனால் அது மிகமிகப் பொருத்த முடைத்து. ஆயினும் சீவகப் பெயரில் செறிந்து கிடந்த எண்ணரியவான இன்பொருட் பயன் எல்லாம், அவ் ஒரு காரணத்துடன் அடங்கி ஒடுங்குவன அல்ல. அப்பெயரினின்று பரந்து விரியும் பலவகை நயங்களில் இதுவும் ஒன்றென இன்புறற்பாலது.

இனி, அப் பலவகை நயங்களில் சில இங்கு முன்னரே முடிந்தன. வாழமுடியாத சூழ்நிலையில் பிறந்து, வாழ்வு பெற்றவன் சீவகன். முதுகாட்டில் தெய்வமும் தேவியும் சேர்ந்து, சீவஎன வாழ்த்தப் பெற்றவன் சீவகன். செத்த மகவு சீவன் பெற்றதென வளர்த்த சுநந்தை மகிழ வாழ்ந்தவன் சீவகன். இறந்த மக்களே பிறந்த மனையில், சீவன்மகவாய்ச் சிறக்க வாழ்ந்தவன் சீவகன். இப் பெயர்க்காரணங்கள் அவன் நாமகரணத்தின் முன்பு நிகழ்ந்தன.

இவ்வாறே அதன் பிந்தி நிகழும் பெயர்க் காரணமும் பல. அவை இவற்றினும் மிக்க வியப்பு விளைப்பன. ஏதிலான் செய்யும் இடரெலாம்கடந்து, தீதிலா வாழ்வு செவ்விதிற் பெற்றவன் சீவகன். மாண்டவனென்று யாவரும் வருந்த மறைந்து வாழ்ந்து, சீவனொடு மீண்டவன் சீவகன். உலக வாழ்வின் தலைவாம்பாகிய ஒழுக்கநெறி விளக்கி விழுப்பமுற வாழ்ந்தவன் சீவகன். இறுதியாக, இல்லறம் துறந்து உறுதியான வீடுபெற்று உய்ந்தவன் சீவகன். இன்னோரன்ன இன்னும் பலகாரணம் உய்த்துணர்வார்க்குப் புலனாகவல்லன.

இங்ஙனம் பெயர்சூட்டுதற்கு முன்னும் பின்னும் தொடர்புற இணைந்த இக் காரணம் அனைத்தும் சீவகப்பெயரில் சிங்கநோக்காகத் திகழும் அழகு புகழ அரியது.

[தொடரும்]

சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பாண்டிய மரபினர்

பாண்டியர், இலக்கியங்களில் செழியர், வழுதியர், மாறர் எனக் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் மிகத்தொன்மையான மரபினர் ஆதலின் பண்டையர் என்னும் சொல்லே பாண்டியர் என்றாயிற்று என்பர். பாண்டுவின் மரபினர் ஆதலின் பாண்டியர் எனப் பட்டனர் எனக் கூறுவாரும் உண்டு. பாண்டியம் என்னும் சொல்லுக்கு உழைப்பு என்னும் பொருள் உண்டு. ஆதலின் நாட்டினை நல்வளம்படுத்த, சிறந்த உழைப்பொடு கூடியவர் எனப் பொருள் கொள்ளலாம். வளம்படைத்த நாட்டினை யுடையவர்களாகையால் செழியர் என்னும் பெயரும் இவர்க்கு உரியதாயிற்று. மாறன், வழுதி என்னும் பெயர்களுக்குச் சரியான காரணம் புலப்படவில்லை.

சிறந்த முத்து விளையும் நாடு பாண்டிய நாடு. இந் நாட்டினை வளம்படுத்துவன வைகையாறும், பொருநையாறுமாம். இந் நாட்டைச் சார்ந்த மலைகளில் சிறந்த மரங்கள் அடர்ந்த காடுகள் அதிகம். இவரது தலைநகர் கூடல் (மதுரை). கொற்கை சிறந்த துறைமுகம்.

பல்யாகசாலை முதுகுமிப் பெருவழுதி

இவன் அறப்போர் புரிந்தவன்; மறக்கள வேள்வி வேட்டவன்; பெரியவள்ளல்; பலயாகங்களைச் செய்தவன் ஆதலின் பல்யாகசாலை

முதுகுடுமிப் பெருவழுதி என வழங்கப் பட்டவன்; சிவபெருமானிடத்துச் சிறந்த பக்தி யுடையவன்; பிறர் மண் கொண்டு தன் நாடு பெருக்கியவன். 'களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலையில் விசும்பாடெருவையைப் பசுந்தடி தடுக்கும்' என இவனது போரைச் சிறப்பிக்கின்றார் நெடும் பல்லியத்தனார் என்னும் புலவர். இவனைப் பாடிய புலவர்கள் காரிகிழார், நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார் ஆவர். இவன் காலத்து முத்தமிழும் சிறந்து விளங்கின. இசைத்தமிழ் சிறந்து விளங்கிய தென்பதை நெடும் பல்லியத்தனார் (நெடும்பல் இயத்தனார்) என்னும் புலவர் பெயரே விளக்கும். நெட்டிமையார் என்ற புலவர், "எங்கோ வாழிய குடுமி தங்கோச் செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த முந்நீர் விழவி னெடியோன் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" என இவ் வழுதியை வாழ்த்துகின்றாராதலின், பஃறுளியாறு அழிவுற்றதற்கு முன்பு இச் செய்யுள் இயற்றப்பட்டதாதல் வேண்டும். ஆதலின், இம் முதுகுடுமிப் பெருவழுதியும் இவரைப் பாடிய புலவர்களும் இடைச்சங்க காலத்தவராவர். ஆதலின், இவனது தலைநகரம் கபாடபுரமாம்.

முடத்திருமாறன்

இவன் இடைச்சங்க காலத்திறுதியில் வாழ்ந்தவன். அப்பொழுது நேர்ந்த கடல்கோளுக்குப் பின்னர், மதுரையில் தங்கிப் பாண்டிய நாட்டாட்சியை மேற்கொண்டவன்; கடைச் சங்கத்தை நிறுவியவன். இவன் காலத்திற்றான் கபாடபுரம் கடல்கோளால் அழிந்தது. இடைச் சங்க காலத்திறுதியில் இவனது அவையில் அரங்கேறிய தொல்காப்பியம் தமிழ்நாடு செய்த தவப்பயனால், கடல்கோளால் அழிந்துபடாது எஞ்சி நின்றது. இவன் இன்சுவை பொருந்தக் கவிபாடும் சிறந்த புலவன் (நற் 105, 228).

இவனே நிலந்தரு திருவிற் பாண்டியன் ஆவன். "கடைச் சங்க மிரீஇயினர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத் திருமாறன் முதலாக" என்பது களவியலுரை. "கபாட புரத்தில் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்தியவன் நிலந்தருதிருவிற் பாண்டியன்; அவர் காலத்து அவர் நாட்டு 49 நாடுகளைக் கடல் கொண்டது'' என்பர் அடியார்க்கு நல்லார். ஆத லின், இடைச்சங்கத் திறுதியிலிருந்த நிலந்தருதிருவிற் பாண்டி யனே கடைச்சங்கத்து முதல்மன்னனாகிய முடத்திருமாறன் ஆவன் என்பது உறுதி.

இவன் சயமாகீர்த்தி எனப்படுவான்; கடற்றெய்வத்திற்கு விழாவெடுத்தவன்; நெறிமுறையால் அரசாண்டவன்; ஆட்சியில் பெரும்பொன் படைத்து வழங்கியவன். இவன் ஆழிவடிம்பலம்ப நின்றான் எனப்படுவான். ஆழிவடிம்பலம்ப நின்ற செயலாவது, இவன் கடலுள் வேற்படையொடு சேய்மைக்கட்சென்று, ஆண்டுத் தீவகத்துத் தன் அடியைப் பதித்து, அங்கே நீரலம்பும்படி செய்த வெற்றியையே குறிக்கும். சயமாகீர்த்தி என்னும் இவனது பெயர், 'ஜயஸ்தானத்து யவத்வீபத்து மாகீர்த்தி நிலவ வாழ்ந்த 'வன்' என்பதை விளக்கும். இவ்வாறு பெருங் கடலகத்து நிலங் கொண்ட செய்தி, மதுரைக் காஞ்சியுள் 75-88 அடிகளில் குறிக்கப் பட்டுளது. ஈண்டு, 'உயர் நெல்லினூர்' யவபுரியாம் (யவம்-நெல், சாலி). இவ்வூர் சேய்மைக்கண் கடலகத்துள்ளது என்பது மேற் குறித்த மதுரைக்காஞ்சி யடிகளால் விளங்கும். உயர்நெல்லினூர் யவத் தீவகத்தது என்பதனைத் திரு. ரா. இராகவையங்கார் அவர் கள் யவத்தீவத்துச் சாஸனச்சான்று கொண்டு நன்கு விளக்கி யுள்ளார்கள்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

இவன் நாடாளும் அரசுரிமையை எவற்றினும் சிறந்ததாகப் போற்றினவன்; நல்லிசைப் புலமை வாய்ந்தவன்; சிறந்த போர் வீரன். 'ஒல்லையூர் தந்த' என்னும் அடைமொழியால் இவனது வீரம் புலனாகிறது. கல்வியறிவுடைய பட்டத்தரசியைச் சிறிதும் பிரிதலாற்றாப் பேரன்புடையவன் இவன். மையல் என்னும் ஊரில் வாழ்ந்த மாவன், எயில் என்னும் ஊரிலிருந்த ஆந்தை, அந்துவன் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் என்பவர்கள் இவனுக்கு ஆருயிர்த் தோழர்கள். இவன் சிறந்த புலவன் (புறம் 71, அகம் 25). இவன் இறந்தவுடனே இவன் மனைவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்ந்து உயிர்துறந்தாள். அவ்வம்மையின் காதல்வாழ்க்கை இத்தகைய தென்பதைத் தீப்பாய்வாளாகி நின்ற நிலையில் அவ்வம்மை கூறிய பாட்டு (புறம் 246) புலப்படுத்தும். இவன் கடைச்சங்க காலத்தவன்.

உக்கிரப்பெருவழுதி

இவ்வேந்தன் சிறந்த புலமையுடையவன் (நற் 98, அகம் 26). மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர சன்மரைக் கொண்டு அகநானூறு தொகுப்பித்தோன் இவனே என்பர். இவனது அவையிற்றான் திருக்குறள் அரங்கேறியது. இவன் சேரமான் மாரி வெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியவர்களுடைய நண்பன். இந் நண்பர்களோடு ஒருங்கு வீற்றிருந்த இவ்வழுதியைக் கண்ட நல்லிசைப் புலமை மெல்லியலாராம் ஔவையார் இவனையும் இவனுடைய நண்பர்களையும் புகழ்ந்து வாழ்த்தியுள்ளார் (புறம் 367). இவன், பகைவனாகிய வேங்கைமார்பனைப் போரில் வென்று, அவனுக்குரிய கானப்பேரெயில் (காளையார்

கோயில்) என்னும் ஊரினைக் கைப்பற்றினான் ஆதலின், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என வழங்கப்பட்டனன் (புறம் 21). இச் செய்தியை உரைத்தவர் ஐயூர் மூலங்கிழார்.

பூதப்பாண்டியன் நண்பனாகிய ஆந்தைக்குரிய எயில் என்னுமூர், இக் கானப்பேரெயில் தானோ என்பது ஆய்வுக்குரியது.

தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

இவன் கடைச்சங்க நாளில் விளங்கிய பாண்டியப் பேரரசன்; செங்கோல் வேந்தன்; கற்றுத் துறைபோகிய காவலன்; புலவர்பால் பேரன்பும் பெருமதிப்பும் உடையவன் (புறம் 72). போர் விருப்பு மிக்குடையவனாதலின், இவன் அவைக்களப் புலவர் தலைவராகிய மாங்குடி மருதனா ரென்பார், வீடடைதற் கேதுவான அறநெறியைக் கடைப்பிடித் தொழுகுமாறு இவனுக்கு நிலையாமையை அறிவுறுத்த, மதுரைக் காஞ்சி என்ற அரியதோர் நூலை இயற்றினார். அந்நூல், இவன் முன்னோர் பெருமையையும் இவனது செங்கோற் சிறப்பையும் வீரத்தையும் பாண்டிநாட்டின் வளத்தையும் மதுரை மாநகரின் வனப்பையும் நன்குணர்த்தும்.

இவன் இளமையிலேயே அரசுகட்டி லேறியவன். இவனது ஆட்சித் தொடக்கத்திலேயே சேரல், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் எழுவரும் இவனை இளைஞன் என்று கருதி, இகழ்ந்துகூறிப் பாண்டி நாட்டைக் கைப்பற்றக் கருதி, மதுரைமா நகரை முற்றுகை யிட்டனர். இதனையுணர்ந்த நெடுஞ்செழியன் சினங்கொண்டு சூளுரை கூறிப் போருக் கெழுந்து உழிஞைசூடிப் போர்புரியத் தொடங்கினன்; சிறிதும் அஞ்சாது, போர் புரிந்து எழுவரும் புறங்காட்டியோடச் செய்தனன். அவர்கள் பாண்டிநாட்டெல்லை கடந்து ஓடும் போது பின்தொடர்ந்து சென்று, தலையாலங்கானம் என்னுமிடத்து மீண்டும் பெரும்போர் புரிந்து, வாகை சூடினன் (புறம் 19, 23).

அம் மன்னர்களுடைய தலைநகரங்களில் அவர்களைத் துரத்திச் சென்று கொன்றனன் (புறம் 78). வேள் எவ்விக்குரிய மிழலைக் கூற்றத்தையும் அதனை யடுத்துள்ள முத்தூர்க் கூற்றத்தையும் இவன் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான்.

இவன் புதிய வீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன்; அவர்களைக் கொன்றதற்கு மகிழ்ந்தது மிலன்; தன்னை மிகுத்ததும் இலன் (புறம் 77). இவன், போரிற் புண்பட்ட தன் வீரர்களைப் பாசறையில் படைத்தலைவன் முன்னே காட்டிச்செல்லத் துயில் சிறிதுமின்றி இரவில் தானே நேரிற்கண்டு அன்புடன் இன்மொழி கூறிப் பாராட்டுவது வழக்கம் (நெடுநல் வாடை). இவனைப் பாடிய புலவர்கள் குடபுலவியனார், குறுங்கோழியூர் கிழார், கல்லாடனார், மாங்குடி மருதனார், இடைக்குன்றூர் கிழார் ஆவர்.

மாறன் வழுதி

இவன் வடபுல மன்னர்களைப் போரிற் புறங்கண்டு வெற்றி கொண்ட வீரன். இவன் கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி என வழங்கப்பட்டனன் (புறம் 51, 52). பன்னாடுதந்த பாண்டியன் மாறன்வழுதி இம் மன்னனாதல் வேண்டும் என யூகிக்க இடனுண்டு. நற்றிணையைத் தொகுப்பித்தோனை பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதியாவன்.

நன்மாறன்

இவன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் எனப்படுவான். இவனது வன்மையையும் வீரத்தையும் நக்கீரர் புகழ்ந்து பாடியுள்ளார். இவன் காலத்து மேனாட்டு யவனர்கள் இவனது நாட்டில் தமிழகத்தில் மதுவகைகளைக் கொணர்ந்து விற்று வந்தனர் (புறம் 56). இவன் தமிழ் நாட்டரசர்களுள் மேம்பட்டு விளங்கினவன். இவனைப் பாடியவர்கள் மதுரை மருதனிளநாகனார்,

மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரர், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர், ஆலூர் மூலங்கிழார், இடைக்காடனர், வடம வண்ணக்கன் பேரிசாத்தனர் ஆவர்.

இவன் ஆலமர் கடவுளன்ன செல்வன் (புறம் 198). கடவுள் சான்ற கற்பிற் சேயிழை மடவோள் இவன் மனைவியாவள். இவன் வெகுட்சியாற் கூற்றத்தை ஒப்பான், வலியால் வாலியோனை யொப்பான், புகழால் மாயோனை யொப்பான், கருதியது முடித்தலால் முருகனை யொப்பான். இவன் காலத்துத் திருச்செந்திலில் நெடுவேள் கோயில் சிறந்து விளங்கியது.

காரிக்கண்ணனர், இவனை "உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற" என விளித்துப் புகழ்ந்து, "கடிமரந் தடித லோம்பு நின் நெடுநல் யானைக் கந்தாற்றாவே" எனக் கூறினர் (புற 57). "நின் யானைக்குக் கந்து ஆற்ரு வாதலால் கடிமரந் தடித லோம்பெனக் கூறுவான் போல், சந்து செய்விக்கும் நினைவாற் கூறினமையின், இது துணைவஞ்சி ஆயிற்று" என்பர் புறநானூற்றுப் பழைய உரையாசிரியர். இவன் பகைவன் யார் என்பது விளங்கவில்லை. எனினும், இவனுக்கும் இவன் காலத்தவனான சோழன் நலங்கிள்ளிக்கும் "இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய" என்னும் அடைமொழியிருத்தலால் சோழன்நலங்கிள்ளியே இவனுக்குப் பகைவனவன் என்பது புலனும். சந்துசெய்விக்க முயன்ற புலவரும் காவிரிப்பூம்பட்டினத்தவ ராதல் இதனை நன்கு வலியுறுத்தும். இருவருக்கும் 'இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய' என்னும் அடைமொழி யிருத்தலால், குடக்கோ நெடுஞ்சேரலாதனும் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போலக் களங்கொள்வாரின்றி வீழ்ந்து பட்டனர் என்பதும் வெளிப்படையாம். ஆலத்தூர் கிழார் பாடிய கையறுநிலையும் இதனை வலியுறுத்தும் (புறம் 225).

வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி

இவன், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய திருமாவளவனெடு நட்புடையவன். இவன் காலத்துப் புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர். இப்புலவர் இவனை, "நல்லிசை முதுகுடி

நடுக்கறத் தழீஇ இளையதாயினுங் கிளையரா வெறியும் அருநரை யுருமிற் பொருநரைப் பொறாச் செருமாண் பஞ்சவ ரேறு" எனக் கூறுவதனால், குடிகளைக் காக்குந் திறனும் பகைவரை யழிக்குந் திறலு முடையவன் என்பது விளங்குகிறது. "ஒருவீ ரொருவீர்க் காற்றுதிர் இருவீரும் உடனிலை திரியீராயின் இமிழ்திரைப் பௌவ முடுத்தவிப் பயங்கெழு மாநிலம் கையகப்படுவது பொய்யாகாதே ......எதின்மாக்கள் பொதுமொழி கொள்ளாது இன்றே போல்க நும் புணர்ச்சி வென்றுவென் றடுகளத்து உயர்க நும் வேலே" என்று கூறிய அறிவுரையொடு கூடின வாழ்த்து, ஒவ்வொருவரும் மனத்திற் கொள்ளவேண்டிய தொன்றும்.

அறிவுடை நம்பி

இவன் இருவேறு வினைகளின் பயன்களாயுள்ள கல்வியும் செல்வமும் ஒருங்கு வாய்க்கப் பெற்றவன்; பெருங்கொடை வள்ளல். இவன் காலத்து வாழ்ந்த சிறந்த புலவர் பிசிராந்தையார். இப் புலவர் இவனுக்கு அறிவுறுத்த, பொருண்மொழிக் காஞ்சி பாடியுள்ளார். இப் புலவர் கோப்பெருஞ் சோழனின் உயிர்த் தோழர். இவன் பாடியவை நற்றிணை 15, குறுந்தொகை 230, அகம் 28, புறம் 188ம் செய்யுட்கள். இம்மை யின்பம் எல்லாவற்றினும் சிறந்தது, மக்களாலுண்டாகும் இன்பம் என இவன் கூறியிருக்கும் பாட்டுப் படித்துணரத் தக்கதொன்றும்.

நம்பி நெடுஞ்செழியன்

இவனும் அறிவுடை நம்பியும் ஒருவரேயாகக் கருத இடனுண்டு, அல்லது அறிவுடை நம்பியின் மகனாயினும் ஆகலாம். இவன் வண்மை, வீரம், நடுநிலைமை முதலிய பண்புகளெல்லாம் ஒருங்கு வாய்க்கப் பெற்றவன். இவன் அரசவின்பங்களை யெல்லாம் துய்த்தவன். பேரெயின்முறுவலார் இவனைப்பாடிய கையறுநிலை எத்தகையோருடைய உள்ளத்தையும் உருகச் செய்யும்.

[மரபுப்பட்டியல் மறுபுறம்]

மரபுப்பட்டியல்

	சேரர்			சோழர்		பாண்டியர்
	1	2	3	1	2	
கி. மு. 200 வரை	உதியன்சேரல்	அந்துவன்சேரல்		முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி		
கி. மு. 200	குடக்கோநெடுஞ் சேரலாதன்	செல்வக்கடுங்கோ (பெருஞ்சேரலாதன்)	பல்யானைச்செல் கெழு குட்டுவன்	கரிகால்வளவன் I	செம்பியன்	
கி. மு. 184		கார்முடிச்சேரல்	ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்	வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி		
கி. மு. 168		பெருஞ்சேரலிரும் பொறை				
கி. மு. 152	கடலோட்டியவேல் கெழு குட்டுவன்			உருவப்பஃறே ரிளஞ்சேட்சென்னி		கருங்கையொள்வாள் பெரும்பெயர்வழுதி
கி. மு. 136			இளஞ்சேரலிரும் பொறை		கோப்பெருஞ் சோழன்	அறிவுடைநம்பி
கி. மு. 120		மாரிவெண்கோ		கரிகாலன் II		நம்பிநெடுஞ்செழியன்

	சேரர் 1	சேரர் 2	சேரர் 3	சோழர் 1	சோழர் 2	பாண்டியர்
கி. மு. 104						
			யானைக்கட்சேய்			
				இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி	கிள்ளிவளவன்	உக்கிரப்பெருவழுதி
கி. மு. 88						
	கோதை					
கி. மு. 72						தலையால.......... நெடுஞ்செழியன்
						கூடகார .... மாறன்வழுதி
				நலங்கிள்ளி		
கி. மு. 56						
				திருமாவளவன்		இலவந்திகை— நன்மாறன்
கி. மு. 40						
						பெருவழுதி
கி. மு. 24						
கி. மு. 8						

(N. B.—49-ஆம் தொகுதியின் 12-வது பக்கத்தில் கண்ட மரபுப்பட்டியல் காலத்தைக்காட்டும் நிலையில் அமையாமையின் இஃது ஈண்டுத் தரப்பட்டது.)

(தொடரும்)

உள்ளுறை

வித்துவான் திரு. K. S. விசுவநாதசாஸ்திரிஅவர்கள், தமிழ்த்துறைத்தலைவர்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

(82-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளுறைகளின் பொதுவியல்பு

இந்நிலையில் உள்ளுறைகளின் பொதுவியல்பும் சிறிது காண்டல் வேண்டும். உள்ளுறைக் குறிப்புக்கள் பலவற்றையும் ஒருங்கு நிறுத்தி வகைப்படுத்துவோமானால் அவை யாவும் மூன்றே வகையுள் அடங்கும். அவ் வுள்ளுறைக் குறிப்புக்களுட் சில தனிப்பொருள் வடிவினவாகவே புலப்படும். மற்றுஞ் சில மெய்ப்பாடாயமையும். இன்னுஞ் சில உவமை அல்லது வேறுபட வந்த உவமத் தோற்ற வடிவிற் காணப்படும். இவற்றுள் முதலது பொருளென்றும், இரண்டாவது மெய்ப்பாடென்றும், மூன்றுவது அணி என்றுங் கொள்வது பொருத்தமாம். எவ்வகை உள்ளுறைக் குறிப்பும் இம் மூன்று வகைகளுக்குள்ளேயே அடங்குவனவாம். இவ் வுண்மை ஒரு மொழிக்கே உரியதன்று. எம் மொழிக்கும் பொதுவாம். என்றுமுள்ள பொது உண்மைகளுக்கு மொழிவேறுபாடு தடையாகாது. இவ் வடிப்பட்ட நோக்கில் எழுந்த பாகுபாடே சுட்டு நகை சிறப்பென்ற இம் மூன்று பாகுபாடும். உள்ளுறைக் குறிப்புக்கள் எத்துணை பல்கி விரிந்தபோதிலும் இம் மூன்றனுள் ஒன்றாக அடங்கவேண்டுமே தவிர நான்காவதாக வேறு ஒருவகை கணிக்க இயலாது. இவ் வுண்மையை உணர்ந்தே தொல்காப்பியனார் இம் மூன்று உள்ளுறைகளையும் இவ்வாறு பகுத்து முறைப்படுத்தி வைத்திருக்கின்றனர். பிறமொழிப் புலவர்கட்கு இவ் வுண்மை புலனாவதற்கு முன்னரே இதனைக் கண்டறிந்து இவ்வாறு கூறிவைத்திருக்கும் தொல்காப்பியரது நுண்ணறிவுதான் எத்துணை பாராட்டுதற்குரியதாகின்றது! இவர் தம் பெருமையைத் தமிழுலகம் அறியுமாறு எடுத்துக் காட்டுவதே எனது விழைவு. யானெழுதிவருங் கட்டுரைகளும் இக் கருத்துடன் எழுந்தனவே.

இனி எடுத்துக்கொண்ட பொருளின்மேற் செல்வோம். இவ்வுள்ளுறைக் குறிப்பினுட் சில பொருள்வடிவின என்றால் அது மெய்ப்பாடாகவும் அணியாகவுந் தோன்றாது சுட்டிக் கூறுதற்குரிய தொரு பொருளாகவே தோன்றவேண்டுமென்றதாயிற்று. அடுத்த உள்ளுறையாகிய மெய்ப்பாடு அம் மெய்ப்பாட்டு வடிவிலும், இறுதியிலுள்ள உள்ளுறை அணி வடிவிலுந் தோன்றுவன வாதலின் அவை பொருளெனப் படா. இவ்வாறாகப் பகுக்கும் இம் மூன்றுவகைப் பாகுபாடே இவ்வுள்ளுறைக் குறிப்பின குறைந்த அளவுப் பாகுபாடு. இவ்வியல்பினைதாம் நுண்ணிதிற் கண்டறிந்து இம் மூன்று உள்ளுறைகளையும் இறுதியில் முறையே நிறுத்தி வைத்திருக்கின்ற தொல்காப்பியனார் நுண்புலப் பெருமையும் நூற்புணர்ப்பு வன்மையும் பெரிதும் பாராட்டுதற்குரியனவே.

சுட்டென்ற உள்ளுறை

இனிச் சுட்டென்ற உள்ளுறை யாதென்று காண்போம். சுட்டிக் கூறுவது சுட்டெனப் படுகின்றது. சுட்டுதலாவது குறித்தல் அல்லது கருதிக் கூறலாம், '[1]தன்னும் அவனுஞ் சுட்டி' எனவும் '[2]மாணார்ச் சுட்டிய' எனவும் வருவன காண்க. '[3]இடைச் சுரத் திறைச்சியும் வினையுஞ் சுட்டி அன்புறுதக்க கிளத்தல்' என்றும் '[4]வருத்த மிகுதி சுட்டுங்காலை' என்றும் வருவனவற்றை நோக்குமிடத்து, கூறக்கருதிய பொருளைச் சுட்டிக் கிளத்தல்தானே சுட்டுதலும் ஆம் என்பதும் அது சுட்டெனவுங் கொள்ளப்படு மென்பதும் போதரும். ஆதலின் இவ்விடத்திற் சுட்டிக் கிளக்கப்படுவதாய பொருள் சுட்டு எனப்பட்டதென்றல் பொருந்தும். அது உள்ளுறையாக வேண்டுமானால் அவ்வாறு சுட்டிக் கிளக்கப்படும் பொருள் உள்ளுறைக் குறிப்பாதல் வேண்டும். எனவே சுட்டிக் கிளத்தற்குரிய பொருள் உள்ளுறைந்து நிற்க இயல்வதே சுட்டென்ற உள்ளுறையாம் என்றதாயிற்று. தொல்காப்பியப் பொருளியலுள் வருவன பல இவ்வியல்பினவே. வரைதல்வேட்கைப் பொருளாக வருவனவற்றை உணர்த்துகின்ற சூத்திரத்திற்கு முன் '[5]செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலான'

[1] தொல். அகத். 39. [2] தொல். புறத். 30. [3] தொல். கள. 7. [4] தொல். பொருளி. 30. [5] தொல். பொருளி. 15.

என் வருவதை நோக்குமிடத்துத் தலைவியோ பாங்கியோ அவ்வரைதல் வேட்கையை வெளிப்படக் கூறுதல் அவர் தகுதிக்கு ஏலாது என்பதை அது அறிவிக்கும். இதனாலேயே "[1]பொழுதும் ஆறும் காப்பும் என்றிவற்றின் வழுவின் ஆகிய குற்றங் காட்டல்' முதலியன வரைதல் வேட்கைப் பொருளவாயின. "[2]நாணும் மடனும் பெண்மையவாகலின் குறிப்பினும் இடத்தினு மல்லது வேட்கை நெறிப்பட வாரா அவள் வயினான' என வருவதும் இதற்குச் சான்றும். அறத்தொடு நிற்றற்கு வரும் எளித்தல் ஏத்தல் முதலியனவும் இத் தன்மையனவே. இவ்விடங்களிலெல்லாம் சுட்டிக் கிளக்கப் படுவதொன்று உள்ளுறைந்து நிற்க இயல்வன வாதலின் இவ்வாறு வருவன பலவும் சுட்டு என்ற உள்ளுறையாதற் குரியனவே என்பதும் புலனாம்.

இறைச்சியும் சுட்டும்

அங்ஙனமாயின் இறைச்சியும் சுட்டாகலாமே எனின், ஆகலாம். ஆயினும் இறைச்சி வேறு, சுட்டு வேறு கூறி வைத்திருக்கின்றனர் தொல்காப்பியர். பெரும்பாலும் கொடுமைசுட்டி வருவதும், சிறுபான்மை அன்பு சுட்டி வருவதும் இறைச்சி யாகின்றது. இவ்விரண்டுந் தவிர ஏனைப்பொருள் பலவற்றையுஞ் சுட்டி வருவது சுட்டாகின்றது. உள்ளுறைந்த பொருளைச் சுட்டி வருகின்ற வகையில் இரண்டு உள்ளுறைகளும் ஒத்த இயல்பினவே. ஆனாலும் கருப்பொருளின் இடமாக அகத்திற்கே வரும் சிறப்பியல்புடையது இறைச்சி. சுட்டிற்கோ அக் கட்டுப்பாடு வேண்டுவதில்லை. இறைச்சி அகத்திற்கே வரும் அச் சிறப்புரிமை தோன்றவே அது பிறக்கும் இடமாயமைந்த கருப்பொருட் பெயராலேயே, அது இறைச்சி என்று பெயர்பெறுவது மாயிற்று. ஆகவே இறைச்சிக்குரிய சிறப்புரிமை பெறாது, இறைச்சியின் வேறுபட்டு வருவன பலவும் சுட்டென்ற உள்ளுறையாம். இவ் வுள்ளுறைக் குரியனவாகப் பொருளியலுள் வருவன பலவும் அகத்திற் குரியனவாகவே காணப்படினும் இத்தகைய உள்ளுறை புறத்திற்கு வருவதும் தடுக்கப்படுவதன்று. இவ் வுண்மையும் நுண்ணிதின் ஆராய்வார்க்கு எளிதிற் புலனாம்.

---

[1] தொல். பொருளி. 16. [2] தொல். கள. 18.

இனி இவ் விரண்டு உள்ளுறைகளையும் உதாரண வாயிலாகவுஞ் சிறிது விளங்கக் காண்போம். இறைச்சிக்கு நச்சினார்க்கினியர் காட்டும் இலக்கியம்,

> “[1]இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
> வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
> சூள்பேணான் பொய்த்தான் மலை”

என்பதாம். இதனுள் ‘சூளைப்பொய்த்தான்’ என்பதே கூறவேண்டும் பொருள். அதன் புறத்தே இங்ஙனம் பொய்த்தான் மலையகத்து நீர் திகழ்வான் என் என இறைச்சிப்பொருள் தோன்றியவாறு காண்க என்கின்றனர் இவ் வுரைகாரர். அத்தலைவன் செய்த கொடுமையாவது அவன் சூள்பொய்த்தது என்றால் அது வெளிப்படையாகவே வந்திருக்கின்றது. நீர் திகழ்வான் என் என்பதே என்றால், அது கொடுமை சுட்டியதும் ஆகாது. இவ்விரண்டு மல்லாது வேறொன்று என்றால் அது இறைச்சியும் ஆகாது. இறைச்சியுட் கொடுமை சுட்டுதல் பெரும்பான்மை. இஃதும் கொடுமையே சுட்டுகின்றது. ஆனால் அது உள்ளுறையாக அமையவில்லை. இறைச்சியே உடனுறை என்ற உள்ளுறை என்று கொள்வதானால் இறைச்சியுட் சுட்டப்படும் கொடுமை உள்ளுறைந்து நிற்றல் வேண்டும். இன்றேல் இறைச்சி வேறு, உடனுறை வேறு என்று தான் கொள்ள நேரிடும்.

> “[2] மறப்புலி யுழந்த வசிபடு சென்னி
> யுறுநோய் வருத்தமொ டுணீஇய மண்டிப்
> படிமுழ மூன்றிய நெடுநல் யானை
> கைதோய்த் துயிர்க்கும் வறுஞ்சுனை
> (மைதோய் சிமைய மலைமுத லாறே)”

என்ற விதமாக வருவன இறைச்சி எனற்கமைந்தன என்று தோன்றுகின்றது. மறப்புலியோடு பொருது சென்னியிற் பெரும்புண் பட்டதொரு யானை நீர்வேட்கை மிக்கதாகிச் சுனையிடம் விரைந்து சென்று காலை மடித்து ஊன்றி, சுனையில் துதிக்கையால் எட்டித் துழாவியும் நீர்பெறாது பெரிதும் உயிர்க்கின்றது. சுனையுள் நீர் இருந்தாலன்றோ அது நீர் பெற இயலும்! சுனையோ வரண்டு கிடக்கின்றது. இங்

[1] கலி. 41. [2] அகம். 119.

நிகழ்ச்சியைக் கூறுகின்ற அத் தலைவி அலராலும் அன்னையின் கொடுஞ் சொற்களாலும் மனம்புண்பட்டாள். அதனாலவள் தலைவன் வரைந்து கொள்ள வேண்டு மென்று விரும்பினாள். அவள்பாற் பணிந்து வேண்டினாள். வேண்டியும் பயனில்லை. அங்ஙனம் அவள் செய்த கொடுமையே அக் கருப்பொருள்-வாயிலாகப் புலப்படுகிறது. இறைச்சியே உடனுறையாகிய உள்ளுறை என்று கொள்ளப் பெறுமாயின், இவ்வாறுய இலக்கியங்களே இதற்கேற்ற எடுத்துக்காட்டாம் என்று தோன்றுகின்றது.

இனி அன்புறு தகுந இறைச்சிபுட் கூட்டற்கு இவர் தரும் இலக்கியமும் உள்ளுறை என்று கோடற் குரியதாகக் காணப்படவில்லை. இவர் காட்டுகின்ற "நசைபெரி துடையர் நல்கலும் நல்குவர்" என்ற குறுந்தொகைச் செய்யுள் அத்தலைவன் அன்புறுகின்ற செய்தியை 'நசைபெரி துடையர் நல்கலும் நல்குவர்?' என வெளிப்படையாகவே மொழிகின்றது. 'பிடிபசி களைஇய பெருங்கை வேழம் மென்சினை யாஅம் பொளிக்கும் அன்பின அவர்சென்ற ஆறு' என்பதும் உள்ளுறையாகாது. இங்ஙனமாகவும் இதனை உள்ளுறை என்றல் எங்ஙனம்?

[1] "துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே"

என்பது போல் வருவன இதற்கு ஏற்ற இலக்கியங்களாகலாம். அங்கே இருப்பதோ சின்னீர், அதனையுங் கன்று கலக்கிவிட்டது. அக்கலங்கல் நீரையும் பிடியே முதலில் உண்ணுமாறு செய்கின்றது அக்களிறு. அக் களிற்றின் அன்புநிலை அத்தலைவற்கும் அன்புணர்ச்சியை மிகுவிக்குமாம். அச் செய்தி உள்ளுறைந்து இக் கருப்பொருளிடமாகப் புலப்படுகின்றது. இவ் வகையில் வருவனவே இறைச்சி என்ற உள்ளுறையாகக் கோடற் குரியன.

இவ் விறைச்சி ஒழிந்த ஏனைச் சுட்டென்ற உள்ளுறை வருமாறு:—

[2] "அன்பற மாறி யாமுள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
என்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாமை யாண்டோர்
அவலம் படுதலும் உண்டு"

---

[1] கலி. [2] கலி. 18.

என வாழ்க்கையுள் இரக்கங் கூறுவதன் வாயிலாக அத்தலைவியின் வருத்த மிகுதி சுட்டியதாம் இது. இவ் இரக்கம் எதற்காகக் கூறப்படுகின்றது? தன் உயிரிழப்பைக் குறிப்பதற்கே. அவ்வுயிரிழப்பளவிற்குத் தன் வருத்தம் மிகும் என்பது இதனாற் சுட்டியதாயிற்று. அஃதும் உள்ளுறையாகப் புலப்படுவதாக அமைதலின் இஃது சுட்டென்ற உள்ளுறையதற் குரியது.

"ஒருநாள் விழுமம் உறினும் வழிநாள்
வாழ்குவ ளல்லளென் றோழி"

என ஊறு அஞ்சிப் பாங்கி கூறலும் விரைவில் அத் தலைவன் வரைந்து கொள்ள வேண்டுமென்று தான் விரும்புகின்றமையை அத் தலைவனுக்கு அறிவிக்குஞ் செய்தியாகிய உள்ளுறைக்குறிப்பை உடையதாதலின் இத் தன்மையனவும் சுட்டென்ற உள்ளுறையே யாம். இவ்வாறே வரைதல்வேட்கைப் பொருளவாய பலவும் அறத்தொடுநிற்றற் குரியனவாய எளித்தல் முதலியனவும், மற்றும் இறைச்சி யல்லாத இத் தன்மையன பலவும் இவ் வுள்ளுறைக் குரியனவே. சுட்டிக் கிளக்க வேண்டும் பொருளை உள்ளுறையாகப் பெற்று இயல்கின்றமை இறைச்சி சுட்டு இரண்டற்கு ஒத்ததாயினும், கொடுமை சுட்டுதல் முதலாய சிறப்பியல்புடையதாகி அகத்திற்கே உரிமை பூண்டு நிற்பது இறைச்சி. இவ் வரையறை இன்றி இயலும் வகையால் இறைச்சியின் வேறுபட்டு வருவன பலவும் சுட்டாம். இறைச்சிக் கமைந்த சிறப்பியல்பு ஒன்றை மட்டும் நீக்கிவிட்டால், அஃதும் சுட்டின் இயல்போடு ஒத்த இயல்புடையதே. பொது வியல்பால் இரண்டு உள்ளுறைகளும் ஒன்றே; சிறப்பியல்பு காணின் இரண்டும் வேறுவேறு உள்ளுறையே என்பதும் நுண்ணிதின் நோக்குவார்க்கு நன்கு புலனும்.

[தொடரும்]

நாலடியார்—திருத்தவுரை

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்.

[முன் ௪௯-ம் தொகுதியில் ௧௯௪-ஆம் பக்கத்தொடர்ச்சி]

அதிகாரம்—பொறையுடைமை. பாட்டு—75.

50 *வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்*
தேற்றா ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூர விடல்.

இ—ள்:—(பாலும் நீரும் கலந்தாற் போலப்) பிரிக்க முடியாமல் இருவர் நண்பாரா யிருக்கையில் தன்னைத் தெளிவிக்காத தீச்செயலொன்ற ஒருவனிட முண்டென்று சிலர் சொல்ல மற்றவன் கேட்டறிந்தால், அவன் அதில் ஐயம் நீங்கும்படி உண்மைகாண வல்லனாம் வரைப் பொறுத்திருக்க; சும்மா இருக்கக் கடவன். அத்துணையும் பொறுத்தலின்றி நண்பனைத் தன்னைவிட்டு நீக்குவனாயின் ஊர் அவனைப் பழிக்காதார்? பழிக்கும். அதனால் உண்மைகாணும்வரை நண்பனை நீக்காமலிருக்கக் கடவன். ஐயம் நீங்கி 'இவன் தீயவனே' என்ற துணிவு பிறந்தால், குற்றத்தைப் புறத்திற் சொல்லாமல், தன்னை யவன் அணுகாதபடி நீக்கி விடுக. எ - று.

எதிர்மறைப் பொருள் தந்த ஏயும் "மகனெனல் மக்கட் பதடியெனல்" என்பது போல் நின்ற விடலென்பதும் ஐயநீக்கத்தில் வரும் இருமுடிவுங் கொள்ள உபகாரப்பட்டு நின்றன. தெளிவிக்கப்படாத என்றதனால் ஐயமும் அது நீங்க ஆராய்தல் என்பதும் போந்தன. பொறுத்தலுக்குச் சும்மா இருத்தல் என்பது 'வழக்கி'லு முண்டு. உண்மைகாணல் எளிதன்மையின் வல்லனாம் என்றார். உண்டாயின்—உண்டென்பா ருளராயின். பொறானாயின் என்பதே, அதன்பிறகு

செய்வதனையு முணர்த்தும். ஆற்றுதல்—வல்லவனாதல். தேறுதல்—நம்புதல். "தேறற்க யாரையும்". தேற்று—பிறவினை எதிர்மறைப் பெயரெச்சம். பிறருரையின் பொருந்தாமையை இதனோடு சீர்தூக்கியறிக.

அதிகாரம்—இரவச்சம். பாட்டு—304.

51 திருத்தன்னை நீப்பினும் தெய்வஞ் செறினும்
உருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லா
லருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்று
எருத்திறைஞ்சி நில்லாதாம் மேல்.

இ—ள்:—நல்ல தன்மையனென்று தயவு செய்யாமல் 'இவன் வறுமையுறட்டும், மானங்கெடட்டு' மென்று திருமகள் தன்னைவிட்டு நீங்கினாலும் (பல துன்பங்களும் வருமாறு) விதி கோபித்தாலும் ('இவர்கள் எவ்வளவு வருத்தினாலும் நான் சினங்கொள்ளக் காரணமில்லை; ஆனால், மானங்கெட நான் இரத்தல் செய்யேன்') என்று மனத்தில் எழுந்த சினத்தை விடுவதோடு தம் தகுதியையும் மானத்தையும் நினைப்பதல்லாமல் (பொருள், தக்கார்க்கு ஈதற்குரியது என்றறியும்) அறிவில்லாதவராய் அதனை மேன்மேலுங் கூட்டுகின்ற மூடர் பின்னே (இரத்தல் நிமித்தம் கீழோர் போலச்) செல்வதோடு அவர்முன் தலைவணங்கி நிற்றலும் மேலோர் செய்வரோ? செய்யார். எ - று.

உருத்த-சிவந்த. "குரும்பையு மிகவி யுருத்தெழு மென்முலை" (பெருங். 1-33.) மனத்தோடு-இது வேறுவினை ஒடு, ஒருவினை ஒடுவாக இங்கே பொருந்தாது; மேலோர் உயர்வுள்ளுதற்குச் சினம் கூட நிற்றல் வேண்டா ஆகலால். "காவோ டறக்குளந் தொட்டானும்" (திரிகடுகம்) "இம்மையே மறுமைதானும் நல்கினை யிசையோ டென்றாள்" (கம்பர்) என்பவற்றிற் போல, நீ இசை பெற்றதோடு எனக்கு மறுமையும் நல்கினை என்பது பொருள். விட இருந்த வுயிரை அது நிகழாமற் காத்தலாற் பெற்ற இசை. உருத்த-ஊக்கங்கொண்ட என்றனர் பிறர். விடப்பட்ட, செறப்பட்ட நிலையில் ஊக்கமெதற்கு? எப்படி யுண்டாகும்? இறைஞ்சுதல் முன்செல்வார்க் கன்றோ? பின்செல்வார் செய்கிற அதனை முன்செல்வா ரெப்படி அறிவர்? என்ற கேள்விக் கிடமாகாமல், சென்று-செல்வதோ டெனப்பட்டது.

அதிகாரம்—நல்லினஞ்சேர்தல். பாட்டு—175.

52 ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஒரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

இ—ள்:—ஊரிலுள்ள சலதாரையின் கழிவுநீர் கங்கை முதலிய நதிகளுடன் சேர்ந்தால், தன்குணமும் உருவமுந் திரிந்து, தான் சேரப் பட்டதின் குணமும் உருவும் பெற்றுப் பேரும் தீர்த்தம் என்று சொல்லப்படும். அதுபோல, பிறந்தோரால் நினைக்கப்படுகின்ற குலமாட்சி யில்லாத சிறுவரும், குடிப்பிறப்பின் நலங்களால் பெருமைபெற்ற நல்லோரைச் சேர்ந்தால், தம் இழிதன்மை மாறி மலைபோலுயர்ந்து விளங்குவர். எ - று.

அங்கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால் பிறிதாகித் தீர்த்தமாம் என்க. உரவு நீர்-குளித்தவருடைய பாவங்களைப் போக்க வல்ல நீர். உம்மை எச்சப் பொருளது. குலமாட்சி-தாய் தந்தையர் இன்னாரென் றறியப் படுதலும், அவராற் பாதுகாக்கப்படுதலும். நயம்-உயர்குலத்துக்குரிய நலங்கள். அவை செல்வம், கல்வி, தவம், ஆள்வினை முதலியன. மாட்சி-இவை யுடைமையாலுள்ள பெருமை. நல்லார்-அறுதைச் சிறுவரைக் காக்கும் பெருந்தன்மையர். பெயரும் பிறிதாகி என நின்ற படியே பொருள்கூறினர் பிறர். குலமாட்சியில்லாரும்-தாம் பிறந்த குலத்தின் பெருமை யில்லாதவரும் என்றனர். இது தாம் தேடிய பெருமையுடையர் என வேண்டாப்பொருள் தருகிறது.

அதிகாரம்—நல்லினஞ்சேர்தல். பாட்டு—179.

53 நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

இ—ள்:— விளைநிலத்தின் நல்லதன்மையால் அதில் விளைந்த நெல் சிறந்திருப்பதுபோல, அவருடைய தாய் தந்தையரின் நல்ல குணங் களாலேயே பிறந்த மக்கள் சான்றோராகின்றனர். மரக்கலத்தின் உப

காரத்தைக் கொடுங்காற்று வந்து கெடுப்பது போல அவாது உபகார குணம் தீயினத்தார் வந்து கூட, அவரால் கெடும். அதனால், சான்றோர் அவர்க்கிடங்கொடுக்கலாகா தென்ப தெஞ்சி நின்றது. தீயினம்-அழுக்காறும் புறங்கூறலு முடையாரா யீவது விலக்குவார். சான்றாண்மை உபகாரச் செயலுமாதல் "சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயின்" என்றதனாலறிக; (நாலடியார் 126). செல்வமிலும் சான்றோருண்டு. "சான்றோர் கொடுத்தா ரெனப்படுஞ் சொல்" (நாலடியார்) என்றதனாலறிக. மரக்கலத்தின் உபகாரம்—பெருவெள்ளத்தைக் கடத்தற்கும் போக்குவரவிற்கு முபகாரப்படுதல். அதனைக் கொடுங்காற்றுக் கெடுத்தல்-அதன் செலவினைத் தடுத்தல். கொடுங்காற் றடிக்கையில் கலத்தைச் செலுத்தார். வு-பிரித்துக் கூட்டல், கலகலத்தை-மரக்கலத்தின் வலிமையை; சிதைத்தாங்கு-கெடுத்தலால் மரக்கலம் கெடுவது போல என்றனர் பிறர். அது பொருந்தாமை யறிக.

அதிகாரம்—நல்லினஞ் சேர்தல். பாட்டு—180.

54 மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால்.

இ—ள்:—நல்லினங்களாகிய வேங்கைமரமும் சந்தனமரமுமுள்ள காட்டில் ஒரு பகுதி வெட்டித் திருத்திய தினைப்புனம்—புல்லினம், தீப்பட்டால் (கட்பொழிந்தும் விட்டு நீங்காமையால் மற்றைப் பகுதியாகிய) அம்மரங்களும் வேகும். அதுபோல, குற்றமற்றமனமுடையாராகத் தாமிருந்தாலும் தம்மிடத்தை அடுத்துவந்து வசிப்பவர் இழிந்த இனத்தாராக இருந்தால் அவர்க்குள்ள இகழ்ச்சி தமக்கும் வரும். அதனால் அவர் அடுத்துவரின் தாம் அவ்விடத்தை விடுக என்பதாம்.

இகழ்ச்சி-அவமதிப்பும் அதனாலுள்ள தீங்குகளும். புனம் தீப்படுதல்-கதிரறுக்கப்பட்டு வெறுந்தாள்களாக நின்ற தினையில் அடுத்த ஆட்டைக் கிருஷி நிமித்தம் கானவர் தீயிடுவர். "கானவர் சூடுறு வியன்புனம்" (அகம். 368). "கானவர் கரிபுன மயக்கிய" (புறம். 159).

என்பவற்றாலறிக. தாம் மறுவில ரேனு மென மேலே கூட்டுக. வெறி-மணம். சேர்ந்த - வந்து அடுத்த. எறிபுனம்—காடழித் துண்டாக்கிய தினைப்புனம். மனத்தில் மறுவில்லாத நல்வினத்தார், தாமிகழப்படு தற்குக் காரணமான இனத்தாரோடு சேர்வரா? சேர்ந்தாராக-இருவருரை. உவமையில் இனமிரண்டு காட்டவில்லை.

அதிகாரம்—நட்பாராய்தல். பாட்டு—211.

55 கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்தின் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரமி லாளர் தொடர்பு.

இ—ள்:— (ஒரு செய்யுளைச் செய்தவர் அதன் பொருளாகக்) கருதியதைத் தாமறியும்படி (ஆசிரியனிடம்) கற்றறிந்த புலவர்களிடத்திலுள்ள நட்பு, என்றும் கரும்பை அதன் குருத்தில் தின்றாற் போல்வது. (அவர்க்கு அதில் இனிமை-இன்பம் தோன்றாதென்பதாம்.) மதுரிப்பதாகிய கல்வியறிவு இல்லாத மூடர்களின் நட்பு, என்றும் கரும்பை அதன் குருத்திற் கெதிராகத் தின்றுசென்றாற் போல்வது. (அவர்க்கு இனிக்குமென்பதாம்.) எ-று.

தமக்கு மட்டுமன்றிப் பிறர்க்கு மின்பந் தருவதாகிய கல்வியறிவை மதுர மென்றார், அது மதுரித்தலின்; உவமையாகு பெயர். "தாமின் புறுவ துலகின்புறக் கண்டு"—திருவள்ளுவர். உணர்ந்து-உணர எனத் திரிக்க. புலவர்கள், அழுக்காறும் ஒருவர் புலமையில் ஒருவர் குற்றங் காணுதலும், இயல்பாக உடையராதலின் அகத்தில் பகை யியல்புடையராயிருப்பர். ஆகையால் புறத்தில் தோன்றுவிக்கிற நட்பு குருத்துப் போ லினிமையற்ற தென்றார். கல்வி யில்லாதவராயினும் 'இவர் நமக் கின்றியமையாதவர்' என்று கொண்டுள்ள நிலையில் மூடரின் நட்பு அவர்க்கு இனிப்பதாகவே யிருக்கும். ஆகையால் கரும்புபோ லினிப்ப தென்றார். கருத்துணர்ந்தென்பது கற்றறிந்தார்க்கடை. அரோ, ஏ-அசைகள். 138-வது பாட்டிற்கும் இதுவே கருத்து. பிறருரை பொருந்தாமை அவருரையிற் காண்க.

[தொடரும்]

கொழும்பில் முத்தமிழ் விழா

:(-:o:-):

ஐப்பசித் திங்கள் 29, 30, தேதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பதினோராவது ஆண்டுநிறைவு விழா முத்தமிழ் விழாவாக நடைபெற்றதைக் குறித்து மிக்க மகிழ்ச்சி எய்துகிறோம். இங்ஙனம் இடையறாது தொடர்ந்து பல தமிழ்ப் பெருவிழாக்களை இலங்கைத் தமிழர்கள் நடாத்திவருவது பாராட்டற்பாலது ஆகும். இவ்விழாவினைத் தொடங்கிவைத்த சங்க அமைச்சரும் காப்பாளருமாகிய திரு. கௌரவ சேர். க. வைத்தியநாதன் அவர்களும் தள்ளா ஊக்கமும் தளரா ஆர்வமும் கொண்டு செயலாற்றும் அச்சங்கச் செயலாளர் வித்துவான். திரு. வ. மு. கனகசுந்தரம் அவர்களும் இவ்விழாவை நிகழ்த்தி இனிதுமுடிப்பதற்கு அரிய பணியாற்றினர்கள் என்று அறிகிறோம். இச்செயலாளர் இலங்கை மலேயா இந்தியா போன்ற பலநாட்டிற் பணிபுரிந்து தமிழ்த்தொண்டன் எனப்பெயர் புனைந்தவர் என்பது நினைத்தற்குரியது.

தமிழ்நாட்டிலிருந்து 'கலைமகள்' ஆசிரியர் வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் M.A. இவ்விழாவில தலைமை தாங்கியும் சொற்பொழி வாற்றியும் செயல்புரிந்திருக்கிறார்கள். மற்றும் இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களாகிய திருவாளர்கள் தனிநாயக அடிகள் M. A M. Litt. வித்துவான். க. கணபதிப்பிள்ளை முதலியோரும் முறையே சொற்பொழி வாற்றியும் தலைமை தாங்கியும் சிறப்பித்துள்ளனர். இசையரங்கு, பட்டிமண்டபம், நடனம், நாடகம், முதலிய பிற நிகழ்ச்சிகளும் ஒருங்கிணைந்து இவ்விழாவை ஒரு முத்தமிழ்த் திருவிழாவாகவே நிகழச் செய்திருக்கின்றன.

இவ்விழாவில் இச்சங்கப் பொதுச் செயலாளர் வித்துவான், திரு. வ. மு. கனக சுந்தரம் அவர்கள் நிகழ்த்திய அரிய வரவேற்புரையின் அழகான அச்சுப் பிரதியும் நிகழ்ச்சி நிரலும் வரப்பெற்றோம். நிகழ்ச்சி நிரலில், சாதி சமய வேற்றுமை கருதாது, ஆடவர் மகளிர் இருபாலாரும் ஒற்றுமையுடன் ஊக்கங் கொண்டது முதன்மையாய்ப் போற்றுந்தரத்தது. தமிழ்ப்பெருஞ் செல்வர்க்கு அறவுரையாய் அமைந்த அவ் வரவேற்புரையை இடமின்மையால் இங்கு வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம். இவ்வாறே இன்னும் பலதமிழ்விழாக்களை நடைபெறச் செய்து மேன்மேலும் தமிழ்ப்பணி புரிய இறையருளால் இச்சங்கத்திற்கு எல்லாநலன்களும் இனிதே எய்துவன ஆகுக.

ஸ்ரீ:

மதிப்புரை

1. புலவர் உலகம் (12-வது தொகுதி, 4-வது புத்தகம்):—[ஆசிரியர்: கவிராஜபண்டிதர் திரு. ஜெகவீர பாண்டியனார் அவர்கள். விலாசம்: திருவள்ளுவர் நிலையம், 127, மேலமாசி வீதி, மதுரை. விலை 1 முதல் 11 தொகுதி தனித்தனி ரூ 5—12—0. வருடச் சந்தா ரூ 5.]

புலவர் உலகம் என்ற பொதுப்பெயரால், இவ் ஆசிரியர் மாதச் சஞ்சிகையாகப் பலபுத்தகங்கள் வெளியிட்டு வருகிறார். அவற்றுள் இது கம்பர் கலைநிலை என்ற பிரிவைச் சார்ந்தது. கலைத்திறம் விளங்கக் கவிச்சக்ரவர்த்தி புனைந்த இராமன் குணங்களை உரைச்சித்திரமாக வரைந்து படிப்பவர் உள்ளத்தில் பதியவைப்பது இது. இதன் ஆராய்ச்சி நுட்பமும் உரைநடைத் திட்பமும் யாவரையும் அகமகிழச் செய்வன.

2. தரும தீபிகை (5-வது தொகுதி 7-வது புத்தகம்):—[ஆசிரியர்: ஷை. கவிராஜ பண்டிதர் அவர்களே. விலாசம்: முன்னையதே. விலை 1 முதல் 4 தொகுதி ரூ 5—12—0. வருடச் சந்தா ரூ 5.]

இப் பெயரிய நீதிநூல் அறமுதற் பொருளைத் திறமுறத் தெரிப்பது. இனிய வெண்பா யாப்பினால் இயன்றது. இதுபோல்வன பல முன்னாளில் தோன்றியிருப்பினும், அவற்றொடு சேர இதுவும் இன்றியமையாததாய் நின்று நிலவ வல்லது. இந் நூலாசிரியரே இதற்கு உரையாசிரியராகவும் விளங்குகின்றார். பழந்தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்து முற்காலப் புலவர் போலவே இக்காலத்தும் ஒரு சிலர் உளரெனின், இவர் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இவ்வாறு இன்பவூற்றெடுக்கும் உரையும் பாட்டும் இயற்றி உதவும் இவ் ஆசிரியர்பெருந்தகைக்குத் தமிழுலகு இயற்றும் கைமாறு யாதுளது?

3. யோக சூத்திரம் (தமிழ் மொழிபெயர்ப்பு):— [ஆசிரியர்: திரு. பண்டித-இராமசுப்பிரமணிய நாவலர் அவர்கள். விலாசம்: செந்தமிழ் நிலையம், தக்கலை. தென் திருவாங்கூர் S. I. விலை. அணு 8.]

பதஞ்சலி முனிவர் அருளிய வடமொழி யோகசூத்திரம் இதன் முதனூல். இறுதியி லின்ப நெறியறிந்து உய்ய இந்நூல் இன்றியமைதது. முன்னாளில் தமிழ்மக்களும் இதனை வடமொழி வாயிலாகவே பயின்று வாழ்ந்தனர். அவர்க்கு அது எளியதும் இனியதுமாய் இருந்தது. இந்நாளில் சில காரணங்களால் வடமொழிப் புலமை தமிழர்க்கு வாயாது போயிற்று. ஆதலால் அம் மொழியின் அரும்பொருள்கள் தமிழாக்கம் பெறுவதை யாவரும் அவாவினர். இக் குறை யுணர்ந்த ஆசிரியர், காலத்தாற் செய்த நன்றியாக, இம் மொழியெயர்ப்பினை உதவியுள்ளார்கள். இது முதனூலுக்கு ஏற்பத் திட்ப நுட்பம் செறிந்த சூத்திரயாப்பான் இயன்று, சிறந்த உரையும் எழுதப்பெற்றுத் திகழ்கின்றது. சிறிய உருவில் பெரிய பொருளை அடக்கிய இவ் அரியநூல், தமிழிலக்கிய வரிசையில் தக்க இடம்பெற்று அழியாது நிற்கத் தருவது.

4. மதுரைத் திருஞானசம்பந்த மடம் ஆதீன வரலாறு: [ஆசிரியர்: இராமநாதபுரம் திரு. கே. சிவஞானம் பிள்ளை அவர்கள். விலாசம்: ஷை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன வித்துவான், மதுரை. விலை இல்லை.]

இது மிகவும் நீண்ட அழகிய நிலைமண்டில ஆசிரியப்பாவால் அமைந்தது. எல்லார்க்கும் தெளிவாக விளங்கும் எளிதான நடை தழுவியது. ஆதீன குருபாரம்பரை வரலாறும், மடாதிபதிகள் பெயர் முதலிய வரலாற்று விவரமும், அன்று முதல் இன்று வரை ஒன்றுவிடாமல் விரித்துரைக்கும் இது, இப்போது இளையபட்டம் எய்தி வீற்றிருந்தருளும் திருப்பெருந்திரு, சோமசுந்தர அடிகளார் அபிடேக வைபவமும் இனிதாக எடுத்துரைக்கின்றது. இதனால், பெரு மூதாளரான இவ் ஆசிரியர், பிள்ளையவர்களின் குருபத்தியும் சைவசமயப் பற்றும் தமிழபிமானமும் நன்கு துலங்குவன ஆகும்.

1953-ஆம்௵ நவம்பர்மீ 19உ (விஜய-௵ ஐப்பசிமீ 4உ) இராமநாதபுரத்தில் மஹாராஜா அவர்கள் அரண்மனையிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1 மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாத சேதுபதி மஹாராஜா அவர்கள்
—அக்கிராஸநாதிபதி.

2 மகா-௱-௱-ஸ்ரீ வித்துவான். மு. இராகவையங்காரவர்கள்.

3 ,, P. ராமஸ்வாமிராஜு அவர்கள் B.A., B.L.

4 ,, A. ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள், B.A., B.L.
Advocate.

5 ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளை அவர்கள், M.A., B.L.
—கௌரவகாரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1 அண்ணாமலை சர்வகலாசாலைக்கு மதுரைத்தமிழ்ச்சங்கத்திலிருந்து இராமநாதபுரம் அட்வொகேட் ஸ்ரீமான் A. ரெங்கசாமி அய்யங்காரவர்களை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

2 1952-ம்௵ செப்டம்பர்மாதமுதல் 1953-ம்௵ அக்டோபர்மாத முடிய சங்கத்து மாதாந்தக்கணக்குகளும், வருடாந்தக்கணக்கும் அங்கீகரிக்கலாயின.

3 1953—1954-ம் ௵த்திய வரவு செலவு திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

4 மதுரை இந்தியன்பாங்கில் இருக்கும் டிபாசிட்தொகைகள் ரூ 3000 ரூ 7000 இரண்டு வருடங்களுக்கு வட்டிக்குப் போட்டிருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

5 கம்பாசிட்டர் T. A. சௌந்தரராஜய்யருக்கும், பியூன் சோமசுந்தரம்பிள்ளைக்கும் நோயுற்றகாலத்தில் செலுத்திய சம்பளம் வகையாராங்ஷன் செய்யப்பட்டது.

6 ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைகள் நடத்த, சென்னையில் St. Ebba's Girls' High School, Kellett High School, இராஜபாளையத்தில் போர்டு உயர்நிலைப்பள்ளி, அபிராமத்தில் முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, விஷ்ணுபுரத்தில் George High School இவைகளை சென்டராக அங்கீகரிக்கப்பட்டது.

7 1953ம் ஷ்ஷ்ப்டத்தில் நடந்த ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷையில் S. S.L.C. பரீக்ஷகர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாயிற்று.

8 பரிசளிப்புத் தொகைகள் சாங்ஷன் செய்யப்பட்டன.

9 சங்கக்கட்டிடத்துப்பின்புறம் எடுக்கப்பட்ட சுவருக்கு ஏற்பட்ட செலவு ரூ. 106 சாங்ஷன் செய்யப்பட்டது.

10 வருடாந்தரக்கொண்டாட்டம் நடத்த ஜனவரி மாதத்தில் தேதி குறிப்பிட President அவர்களைக் கோரும்படி தீர்மானிக்கப்பட்டது.

11 சங்கத்துமுன்காலியிடத்தை நல்லவாடகை கிடைத்தால் வாடகைக்கு விடலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

மதுரைத்தமிழ்ச்சங்கம், 19—11—1953.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.